செ.வெ.எண் - 24    நாள் 12/1/2021

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
## தஞ்சாவூர் மண்டலம்

ந.க.எண். சி3 /6518 /2020
நாள்: 04.01.2021

முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம்,
த.நா.நு.பொ.வா.கழகம்,
சச்சிதாநந்த மூப்பானார் ரோடு
தஞ்சாவூர் – 613 001.

**பத்திரிக்கைச்செய்தி**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றிட பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் (தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உட்பட்ட)**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பருவகால பணியிடம் பணியாற்றிட தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக முதுநிலை மண்டல மேலாளர்(பொ) திரு.ஜி.சிற்றரசு அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சாவூர் மண்டலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் (நெல் கொள்முதல் பருவத்தில் மட்டும்) பட்டியல் எழுத்தர் 62, உதவுபவர்72 மற்றும் காவலர் 51 பணியாற்றிட பணியிடத்திற்கு பணியாளர்கள் (ஆண்கள் மட்டும்) நியமனம் செய்திட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இட ஒதுக்கீடு முறையில் 2020 ம் ஆண்டு 31.12.2020 அன்று பொதுப்பிரிவினர் 18 வயது முதல் 30 வயது வரையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) 18 வயது முதல் 32 வயது வரையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், (அருந்ததியர்) 18 வயது முதல் 35 வயது வரையிலும் விண்ணப்பிக்கலாம்.

கல்வித்தகுதி பட்டியல் எழுத்தருக்கு B.Sc (Biology) மற்றும் B.Sc Non Biology, உதவுபவருக்கு பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் காவலர் பணிக்கு எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஊதிய விபரம்

1) பட்டியல் எழுத்தர் – Basic- Rs. 2410- DA- Rs.4049
2) உதவுபவர் – Basic-Rs. 2359- DA – Rs.4049
3) காவலர் – Basic-Rs. 2359- DA – Rs.4049

தகுதியுடையவர்கள் உரிய சான்றிதழ்களுடன் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சச்சிதானந்த மூப்பனார் ரோடு, தஞ்சாவூர் 613 001 என்ற முகவரியுள்ள அலுவலகத்தில், சான்றொப்பமிடப்பட்ட கல்வித்தகுதி சான்றிதழ், சாதி சான்றிதழ், ஆகியவற்றுடன் 28.01.2021 -க்குள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வரப்பெற்ற விண்ணப்பங்களில் அரசு / கழக விதிகளின்படி தகுதியுடைய நபர்களுக்கு நேர்காணல் கடிதம் அனுப்பப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

4/1/2021

முதுநிலை மண்டல மேலாளர்(பொ)
த.நா.நு.பொ.வா.கழகம்,
தஞ்சாவூர் மண்டலம்

4.1.21    2/2



\\192.168.1.123\tncsc all\procure\c3 -2013\c3- 6518-2020 dt. 24.12.2020 dpc labour paber publication.doc